IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.158/2020
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 3.10 p.m.

பி.வா.சா.2 சாட்சி ஜோதிபாசு த.பெ.பேயத்தேவர்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additioanl District Munsif on 13.2.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. 1ம்பிரதிவாதி என் மனைவியுடன் உடன் பிறந்த தம்பி என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி ஏற்கனவே பிரதிவாதி தரப்பில் 1வது சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியும். 1ம்பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட பிளாட் எண் 47 என்றால் சரிதான். வாதிகளின் பிளாட் எண்கள் 56, 59 என்றால் சரிதான். பிளாட் எண் 56, 59ல் எனக்கோ, 1ம்பிரதிவாதிக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான்.

2. பிளாட் எண் 47 ஆரம்பத்தில் 1ம் பிரதிவாதியின் தந்தையும், எனது மாமனாரான முருகனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். தாவா பிளாட் எண்கள் 56, 59 சொத்துக்களுக்கு வெகு தொலைவில் 1ம்பிரதிவாதியின் தந்தை முருகனுக்கு ஒதுக்கப்பட்ட 47ம் பிளாட் உள்ளது என்றால் சரிதான். எனது மாமனார் முருகன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது மாமனார் உயிருடன் இருந்த காலத்தில் மேற்படி 47ம் நம்பர் பிளாட்டில் வீடு கட்டவில்லை என்றால் குடிசை அமைத்திருந்தார்.

3. நான் திருமங்கலம் சின்னசெங்குளம் பகுதியில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி திருமங்கலம் பானு தியேட்டர் அருகில் குடியிருந்து வருகிறார். நானும், எனது மைத்துனரும் திருமங்கலத்திற்கு குடிவந்து எத்தனை ஆண்டுகள் ஆகும் என்றால் 2015ஆம் ஆண்டு முதல் குடியிருந்து வருகிறோம்.

4. இவ்வழக்கு தாக்கல் செய்த 2020 ஆம் ஆண்டு காலகட்டத்தில் வாதிகள் மீது எனது மாமியார் பேச்சியம்மாள் ( 1ம்பிரதிவாதியின் தாயார்) காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி புகார் என்ன புகார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி புகாருக்கு பின்புதான் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். நானும், 1ம்பிரதிவாதியும் சேர்ந்துதான் இவ்வழக்கை நடத்துகிறோம் என்றால் சரிதான்.

5. பிளாட் எண் 47 1ம்பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியம் என்று எனது எதிர்வழக்குரை மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவாச் சொத்து அருகே மொத்தம் எத்தனை பிளாட்டுகள் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. ஆனால் பட்டா வாங்கிய நபர்கள் அனைவரும் அவரவர் அவரவர் இடத்தில் வசித்து வருகிறார்கள்.

6. 1ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பிளாட் எண் 47ஐ நீதிமன்ற ஆணையர் மூலமாக அளவீடு செய்து சரிபார்ப்பதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். வாதிகள் மற்றும் 1ம்பிரதிவாதிகளின் இடங்கள் வெவ்வேறு என்பது நீதிமன்ற ஆணையர் மூலமாக அளவீடு செய்தால் தெரியவரும் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் மூலம் தாவாச் சொத்துக்கள், எதிர்கோரிக்கை சொத்துக்களை

அளவீடு செய்ய எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். அளவீடு செய்வதற்கு எனது தரப்பில் ஒத்துழைப்பு தருகிறேன் என்றால் சரிதான்.

7. பிளாட் எண் 47ல் வாதிகள் 1ம்பிரதிவாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது எதிர்கோரிக்கை விபரம் தவறானது என்றாலும், எதிர்கோரிக்கை பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றாலும் சரியல்ல. வாதிகள் பிராதில் கூறியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை.**

முடிவடையும் நேரம் :3.25 p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.13 17:45:20 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.